දිස්ත්‍රික් ලේකම් කායර්ාලය, මුලතිව්.
ගරු අමාත්‍යතුමාගේ නිරීක්ෂණ සහ ස්ථාවර නියෝග අංක 119(4)
ප්‍රකාරව රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් ඉදිරිපත් කර
ඇති වාතර්ා සම්බන්ධයෙන් ගෙන ඇති පියවර පිළිබඳ කරුණු
ඉදිරිපත් කිරීම

நிறுவனத்தின் பெயர் : மாவட்ட செயலகம், முல்லைத்தீவு

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால்
முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற்
கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின்
அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும்
நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

District Secretariat, Mullaitivu.
Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports Tabled by the committee of Public Accounts in Terms of standing Order No. 119(4)

நிறுவனத்தின் பெயர் : மாவட்ட செயலகம், முல்லைத்தீவு

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

இலங்கை பாராளுமன்றின் அரச கணக்குகள் தொடர்பான கணக்குகள் குழுவினால் முன்வைக்கப்பட்ட நிலையியற்கட்டளை 119(4) தொடர்பான அவதானிப்பு மற்றும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை பாராளுமன்றுக்கு சமர்பித்தல்.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல – 79

மாவட்ட செயலகம் முல்லைத்தீவு.

இல	அரச கணக்குகள் குழுவினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டல்கள்.	கணக்கீட்டு உத்தியோத்தரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கை.	தற்போதைய நிலைமை.
பகுதி 01 : 80			
01	வாகன பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்படவில்லை. இடர்கள் குறித்த பதிவு இன்றுவரை பராமரிக்கப்படவில்லை.	அனைத்து பதிவேடுகளும் இற்றைப்படுத்தப்பட்டு பராமரிப்பதற்கு உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது	அனைத்து பதிவேடுகளும் இற்றைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்படுகின்றது
02	அரச கணக்குகள் திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் 171/2004 11.05.2004 இன் படி மென்பொருட்களின் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் கடவுச்சொற்கள் ஒவ்வொரு மூன்று மாதத்தில் மாற்றப்படவில்லை.	11.05.2004 திகதியிடப்பட்ட கணக்குகள் திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் 171/2004 இன் படி மென்பொருட்களின் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் கடவுச்சொற்கள் ஒவ்வொரு மூன்று மாதத்தில் மாற்றுவதற்கு , உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது	ஒவ்வொரு மூன்று மாதத்திலும் கடவுச்சொற்கள் மாற்றப்படுகின்றது மற்றும் 2024 ஆம் ஆண்டிலிருந்து பதிவேடு பராமரிக்கப்படுகின்றது.
03	01 மாத காலத்திற்குள் பொதுக் கணக்காய்வாளரால் எழுதப்பட்ட அனைத்து தணிக்கை வினாக்களுக்கும் பதில்கள் பெறப்படவில்லை.	தேசிய கணக்காய்வு மற்றும் உள்ளக கணக்காய்வு ஐயவினாக்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	2022 நிதியாண்டில் 20 தேசிய கணக்காய்வு ஐயவினாக்கள் பெறப்பட்டு 20 ஐயவினாக்களுக்கும் பதில் அளிக்கப்பட்டுள்ளது. 53 உள்ளக கணக்காய்வு ஐயவினாக்கள் பெறப்பட்டன மற்றும் 52 குறிப்பிட்ட காலப்பகுதியில் அளிக்கப்பட்டுள்ளது. தற்போது தேசிய கணக்காய்வு மற்றும் உள்ளக கணக்காய்வுக்கான இறுதி அல்லது இடைக்கால பதில் ஒரு மாத காலத்திற்குள் சமர்பிக்கப்படுகின்றது.
04	உள்ளக கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 01 மாத காலத்திற்குள் பதிலளிக்கப்படாது காணப்பட்டது.		

05	நி.பி 134(2) இன் பிரகாரம் பொதுகணக்காய்வாளருடன் கலந்தாலோசித்த பின்னர் ஆண்டின் தொடக்கத்தில் உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்படவில்லை.	ஆண்டின் தொடக்கத்தில் உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் 2023ம் ஆண்டுமற்றும் 2024ம் ஆண்டு வருட தொடக்கத்திலிருந்து தயாரிக்கப்பட்டுள்ளது.
06	26.06.2017 திகதியிடப்பட்ட சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 01/2017 இன் பந்தி 07 இன் பிரகாரம் 2018ம் ஆண்டு தொடர்பான சொத்துக்கள் கொள்வனவு மற்றும் அகற்றல் தொடர்பான தகவல்கள் கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	சொத்துக்கள் கொள்வனவு மற்றும் அகற்றல் தொடர்பான தகவல்கள் ஜெனரல் அலுவலகத்திற்கு தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	26.06.2017 திகதியிடப்பட்ட சொத்துமுகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 01/2017 இன் பந்தி 07 இன் பிரகாரம் சொத்துக்கள் கொள்வனவு மற்றும் அகற்றல் தொடர்பான தகவல்கள் கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது மற்றும் சொத்துக்கள் கொள்வனவு மற்றும் அகற்றல் தொடர்பான பதிவேடுகள் 2024 ஆம் ஆண்டிலிருந்து பராமரிக்கப்படுகின்றது.
07	மற்றும் இருப்பு கணக்கெடுப்பு குழுவினால் வழங்கப்பட்ட மிகை மற்றும் பற்றாக்குறை மீதான பரிந்துரைகளுக்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	பரிந்துரையை நடைமுறைப்படுத்தவும் இருப்புகளிலுள்ள மிகை மற்றும் பற்றாக்குறை குறித்து தேவையான நடவடிக்கை எடுக்கவும் உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	2024 இலிருந்து மிகை மற்றும் பற்றாக்குறை மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, தற்போது இருப்புகளில் மிகை அல்லது பற்றாக்குறை இல்லை.
08	பயன்பாடற்ற வாகனங்கள் பயன்பாடற்று 08 மாதங்களுக்குள் அகற்றப்படவில்லை.	2023ம் ஆண்டு முதல் அரச நடைமுறைப்படி பயன்பாடற்ற வாகனங்களை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	இவ் குறைபாட்டினை நிவர்த்தி செய்வதற்கு பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. • ஒரு வாகனம் விற்பனை செய்யப்பட்டுள்ளது • 05 மோட்டர் வாகனங்கள்,01 உழவியந்திரம்,02 வாகனங்கள் கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு மாற்றப்பட்டுள்ளது. • மேலும் 02 வாகனங்கள் திருத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

09	அனைத்து வாகனங்களினதும் உரிமையினை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் காணப்படவில்லை.	வாகனங்களினது உரிமையை உறுதிப்படுத்துவதற்கு அல்லது மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	• 06 வாகனங்களின் உரிமையை மாற்ற வேண்டியிருந்தது. • தற்போது, 05 வாகனங்கள் மாற்றப்பட்டுள்ளன, ஒரே ஒரு இரட்டை நோக்கம் கொண்ட வாகனத்தின் உரிமையை மாற்ற வேண்டும், அதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.
10	ஒரு வருடத்திற்கு மேலாக நிலுவைத்தொகைகள் தீர்க்கப்படவில்லை.	ஒரு வருடத்திற்கு மேலாக அறவிடவேண்டிய ரூபா 157,959.90 னை பதிவளிப்பதற்கான திறைசேரி மற்றும் அமைச்சின் செயலாளரின் அனுமதி 2023 ம் நிதி ஆண்டில் பெறப்பட்டு பதிவளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	அறவிடவேண்டிய தொகை ரூபா 157,959.90 2023 ம் நிதியாண்டில் பதிவளிக்கப்பட்டுள்ளது. தற்போது எதுவிதமான நிலுவவயும் இல்லை.
11	நி.பி 571 ன் பிரகாரம் காலம் சென்ற வைப்புக்களுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	நி.பி 571 ன் பிரகாரம் 'காணி தொடர்பான வைப்புக்கள் தவிர்ந்த ஏனைய காலம் சென்ற வைப்புக்களுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	பின்வரும் காலாவதியான வைப்புத்தொகை 2022 ஆம் ஆண்டில் பின்வருமாறு காணப்பட்டது. 1-2 வருட வைப்புத்தொகை ரூபா 7,498,832.75 2-4 வருட வைப்புத்தொகை ரூபா 4,037,134.31 2023 இலிருந்து உரிய நடவடிக்கை மேற்கொண்ட பின் வைப்புக்கள் பின்வருமாறு காணப்படுகின்றது. • 1-2 ஆண்டுகால வைப்புக்கள் ரூபா. 1,666,580.08 மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் காணப்படுகின்றது. • 2-4 ஆண்டுகால வைப்புக்கள் ரூபா. 63,847.20 மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் காணப்படுகின்றது.

பகுதி 02 : 65			
12	மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் மாதந்தோறும் நடத்தப்படவில்லை.	இது குறித்து மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவருக்கு தெரிவிக்கப்பட்டது.	ஒருங்கிணைப்பு குழு தலைவரின் பங்குபற்றலுக்கு ஏற்ப ஆண்டுக்கு 3 அல்லது 4 மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடத்தப்படுகிறது.
13	மாவட்ட செயலாளரினால் பிரதேச செயலாளர்கள் கூட்டங்கள் மாதாந்தம் நடத்தப்படவில்லை.	பிரதேச செயலாளர்கள் கூட்டத்தை மாதாந்தம் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	பிரதேச செயலாளர்களுடனான கூட்டங்கள் நேரடியாகவோ அல்லது zoom ஊடாக நடத்தப்படுகின்றது.
14	1946ம் ஆண்டின் இல 32 கொண்ட நீர்ப்பாசன கட்டளையின் படி மாவட்ட விவசாய குழுக் கூட்டங்கள் நடத்தப்படவில்லை.	1946 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க நீர்ப்பாசன கட்டளையின் படி மாவட்ட விவசாயக் குழுக் கூட்டங்களை நடத்துவதற்கு உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.	2022 இலிருந்து காலாண்டுக்கு ஒருமுறை மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் நடத்தப்படுகிறது.
15	மாவட்ட வீடமைப்பு குழு மாதந்தோறும் கூட்டப்படவில்லை.	ஒவ்வொரு மாதமும் கூட்டத்தை ஏற்பாடு செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டு, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவருக்கு தெரிவிக்கப்பட்டது.	2024 இலிருந்து கூட்டம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
16	இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கூட மாவட்ட சுற்றுச்சூழல் குழு கூட்டப்படவில்லை.	இக் கூட்டத்தை குறைந்தது இரண்டு மாதங்களுக்கு ஒருமுறையாவது நடத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.	2024 இலிருந்து கூட்டம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.
17	மாவட்ட உர ஒருங்கிணைப்பு குழு மாதந்தோறும் கூட்டப்படவில்லை.	மாவட்ட உர ஒருங்கிணைப்பை மாதந்தோறும் நடத்துவதற்கு உரிய அதிகாரிக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.	உர உதவி பணிப்பாளர் பதவி வெற்றிடமாக இருக்கின்றபோதும், 2024 இலிருந்து மாவட்ட விவசாய குழு கூட்டங்களுடன் மாவட்ட உர ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்தப்படுகிறது.
18	மாவட்ட விலை நிர்ணயக் குழு கூட்டம் மாதந்தோறும் நடத்தப்படவில்லை.	மாவட்ட விலை நிர்ணயக் குழு கூட்டத்தை மாதந்தோறும் நடத்த சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.	2023 இலிருந்து ஒவ்வொரு அரையாண்டும் மாவட்ட விலை நிர்ணய குழுக்கூட்டம் நடத்தப்படுகிறது.
19	தயாரிக்கப்பட்ட மனிதவள மேம்பாட்டுத் திட்டம், ஒரு உத்தியோகத்தருக்கு ஒரு வருடத்திற்கு குறைந்தபட்சம் பன்னிரண்டு மணி நேர கூடுதலாக பயிற்சியளிக்கவில்லை.	உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வாய்ப்புகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	2024 முதல் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் அவர்களின் தேவைகளின் அடிப்படையில் குறைந்தது 12 மணிநேரம் பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

20	அனைத்து உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய செயற்திறன் ஒப்பந்தத்தின் வரைவு தயாரிக்கப்படவில்லை.	அனைத்து உத்தியோகத்தர்களினதும் செயற்திறன் ஒப்பந்தம் தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	செயற்திறன் ஒப்பந்தம் 2024 ஆம் ஆண்டிலிருந்து தயாரிக்கப்பட்டுள்ளது.
21	நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு கருத்து மறுக்கப்பட்ட அல்லது பாதகமான அல்லது வரையறுக்கப்பட்ட அபிப்பிராயம்.	நிறுவனத்தின் கணக்குகள் மீதான தேசிய கணக்காய்வின் முனைப்பழியற்ற அபிப்பிராயம் பெறுவதற்கான அறிவுறுத்தல்கள் அனைத்து உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.	2022 & 2023 நிதியாண்டுக்கான தேசிய கணக்காய்விலிருந்து வரையறுக்கப்பட்ட அபிப்பிராயம் பெறப்பட்டுள்ளது மற்றும் எதிர்காலத்தில் முனைப்பழியற்ற அபிப்பிராயம் பெறுவதற்கான தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.
22	செயல்திறன் இலக்கு குறித்த காலத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.	செயல்திறன் இலக்கு உரிய காலத்தில் சமர்ப்பிப்பதற்கு உரிய அதிகாரிக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	2023 இலிருந்து செயல்திறன் இலக்கு சமர்ப்பிப்பதற்கான அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.
23	மாவட்ட மற்றும் பிரதேச போதைப்பொருள் தடுப்புக் குழு கூட்டம் ஒவ்வொரு காலாண்டிலும் ஒருமுறை கூட நடத்தப்படவில்லை.	மாவட்ட மற்றும் பிரதேச போதைப்பொருள் தடுப்புக் குழு கூட்டத்தை காலாண்டுக்கு ஒருமுறை நடத்துவதற்கு உரிய அதிகாரிக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	மாவட்ட மற்றும் பிரதேச போதைப்பொருள் தடுப்புக் குழு கூட்டம் 2024 முதல் காலாண்டுக்கு ஒருமுறை மட்டும் குழந்தைகள் பாதுகாப்புக் குழுக் கூட்டத்துடன் நடத்தப்படுகிறது.
24	இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் அடிப்படையில் 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ குழுக் கூட்டம் நடைபெறவில்லை.	2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டத்திற்கு அமைவாக அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்கு கூட்டத்தை நடத்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.	அனர்த்த முகாமைத்துவக் குழு கூட்டங்கள் 2023 இலிருந்து காலாண்டுக்கு ஒருமுறை அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் நடத்தப்படுகிறது.
25	திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களில், வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களின் அளவு 50% க்கும் குறைவாக இருந்தது.	பயிற்சி வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கு பயிற்சி பிரிவிற்கு அறிவுறுத்தப்பட்டது.	640 பணியாளர்கள் 2024 இல் பயிற்சி வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர் மற்றும் 2023 முதல் அனைத்து அதிகாரிகளுக்கும் அவர்களின் தேவைகளின் அடிப்படையில் பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றது, மேலும் உற்பத்தித்திறன் அலகு மூலம் நடத்தப்படும் அறிவுப்பகிர்வு திட்டத்தின் மூலம் அனைத்து அதிகாரிகளுக்கும் வாய்ப்புகள் வழங்கப்படுகின்றது.
26	கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவில்லை.	கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	கணக்காய்வாளர் நாயகத்தின பரிந்துரைகளில் பெரும்பாலானவை ஒவ்வொரு ஆண்டும் பொதுக்கணக்காய்வாளரின் அறிக்கையைப் பெற்ற பிறகு செயல்படுத்தப்படுகிறது.

27	குடிமக்கள்/வாடிக்கையாளர் சாசனத்தின் பயன்பாட்டைக் கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் ஒரு வழிமுறை நிறுவனத்தால் உருவாக்கப்படவில்லை.	குடிமக்கள்/ வாடிக்கையாளர் சாசனத்தை மதிப்பிடுவதற்கான வழிமுறையை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.	குடிமக்கள்/ வாடிக்கையாளர் சாசனத்தை மதிப்பிடுவதற்கான வழிமுறை 2024 இல் உருவாக்கப்பட்டுள்ளது.
28	ஆற்றல் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரிப்பதற்கு திணைக்களத்தின் சிரேஸ்ட அதிகாரியின் பெயர் குறிப்பிடப்படவில்லை.	சிரேஸ்ட அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் ஆற்றல் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.	மேலதிக மாவட்ட செயலாளரின் பெயர் பயிற்சி வழங்கும் அலகின் மேற்பார்வைக்காக அவரின் மேற்பார்வையின் கீழ் ஆற்றல் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2024 ம் ஆண்டில் தயாரிக்கப்பட்டுள்ளது.
29	பொது கணக்குகள் மீதான குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள்/வழிகாட்டல்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை	பிரதேச செயலாளர்கள் மற்றும் கிளைத்தலைவர்களுக்கு பொது கணக்குகள் மீதான குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள்/வழிகாட்டல்களினை நடைமுறைப்படுத்துவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	பொது கணக்குகள் மீதான குழு கூட்டம் 2013 ம் ஆண்டு நடைபெற்றது இதில் வழங்கப்பட்ட அனைத்து பரிந்துரைகளும் 2013 இல் இருந்து தற்போதுவரை நிறைவேற்றப்பட்டுள்ளது குறைபாடுகளுக்கான 15 பரிந்துரைகள் பொது கணக்குகள் மீதான குழுவினால் வழங்கப்பட்டது 2023 ல் அனைத்து குறைபாடுகளும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது
30	அதிகூடிய சேவைக்காலத்தினை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களுக்கு சீரான இடமாற்றம் மேற்கொள்ளப்படவில்லை.	வெலிஓயா பிரதேச செயலாளர் தவிர்ந்த அதிகூடிய சேவைக்காலத்தினை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களுக்கு உள்ளக இடமாற்றம் மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	மாவட்ட செயலகத்தின் உள்ளக இடமாற்றல் சபையினால் வருடாந்தம் உள்ளக இடமாற்றம் மேற்கொள்ளப்படுகின்றது. அதிகூடிய சேவைக்காலத்தினை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களின் விபரம் பொதுநிர்வாக,உள்நாட்டு அலுவல்கள்,மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

……………………
அ.உமாமகேஸ்வரன்
மாவட்ட செயலாளர்
மாவட்ட செயலகம்
முல்லைத்தீவு.

அ.உமாமகேஸ்வரன்
மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர்,
மாவட்ட செயலகம்,
முல்லைத்தீவு.

…………………………
ம.செல்வரத்தினம்
பிரதம கணக்காளர்
மாவட்ட செயலகம்
முல்லைத்தீவு.

ம.செல்வரத்தினம்
பிரதம கணக்காளர்
அரசாங்க அதிபருக்காக / மாவட்ட
செயலாளருக்காக
மாவட்ட செயலகம், முல்லைத்தீவு

செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

Pradeep Yasarathna
Secretary
Ministry of Public Administration, Home Affairs,
Provincial Councils & Local Government
(Home Affairs Division)
"NILA MEDURA" Elvitigala Mawatha, Colombo 05.

பிரதீப் யசரத்ன

செயலாளர்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2024 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

கௌரவ தினேஸ் குணவர்தன (பா.உ.)

பிரதம அமைச்சர் மற்றும்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்